பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22.04.2026 WEDNESDAY 12. 40 PM

ஆகாஷவாணி
(Tune)

செய்திகள் - வாசிப்பவர் - வடிவழகி கபிலன்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் நாளை நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தலைமத் தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.
2. மேற்கு வங்கத்தில் முதல் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்காக 44 ஆயிரத்து 376 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
3. மக்கள் தொகை கணக்கெடுப்பில் இதுவரை 26 லட்சம் வீடுகள் தொடர்பான தகவல்கள், சுய பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தலமைப்பதிவாளர் தெரிவித்துள்ளார்.
4. இந்தியா- ஜெர்மனி இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
5. இந்தியா- தென் ஆப்பிரிக்கா இடையேயான மூன்றாவது மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

. . இனி விரிவான செய்திகள் . . .

>>>>> <<<<<

தமிழகத்தில் 234 தொகுதிகளிலும், மேற்கு வங்கத்தில் முதல் கட்டமாக 152 தொகுதிகளிலும் நாளை நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

தமிழகத்தில் 5 கோடியே 73 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் முதல் முறை வாக்காளர்கள் 14 லட்சத்து 59 ஆயிரம் பேர் வாக்களிக்க உள்ளதாக தெரிவித்தார்.

75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் மட்டும் நிர்வகிக்கும் 325 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 418 வாக்குப்பதிவு எந்திரங்கள் தயார் நிலையில் உள்ளதாகவும், பதற்றமானவை என்று கண்டறியப்பட்ட 5 ஆயிரத்து 949 வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

4 லட்சத்து 18 ஆயிரம் தபால் வாக்குகள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படையினர் இதுவரை 543 கோடி ரூபாய் பறிமுதல் செய்துள்ளதாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட்- 91 செகன்ட்ஸ்)

இதனிடையே நாமக்கல் மாவட்டத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் தவறாமல் வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(வாய்ஸ் பைட்- 60 செகன்ட்ஸ்)

மேற்கு வங்கத்தில் ஆயிரத்து 478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வாக்குப்பதிவுக்காக 44 ஆயிரத்து 376 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 5 ஆயிரத்து 444 வாக்குச்சாவடிகள் நூறு சதவீதம் பெண்களால் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Balurghat, Asansol மற்றும் Dakshin சட்டப்பேரவைத் தொகுதிகளில் மாற்றுத்திறனாளிகளால் செயல்படும் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து வாக்குச்சாவடிகளும் Web Casting மூலம் கண்காணிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

>>>>> <<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்தாண்டு இதே நாளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தீவிரவாதிகளின் செயலால் உயிரிழந்த அப்பாவி மக்களை நினைவு கூர்வதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், தீவிரவாதிகளின் செயலை நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று கூறியுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நாடு அஞ்சலி செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தருணத்தில் தீவிரவாதத்துக்கு எதிராக நாடு ஒருங்கிணைந்து நிற்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறியுள்ளனர்.

>>>>> <<<<<

மக்கள் தொகை கணக்கெடுப்பில் இதுவரை 26 லட்சம் வீடுகள் தொடர்பான தகவல்கள், சுய பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தலைமைப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் டிஜிட்டல் பதிவேற்ற முறைக்கு மக்கள் ஆதரவு தெரிவித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

ஆந்திரா, உத்தராகண்ட், மத்திய பிரதேசம், அருணாச்சல பிரதேசம், சத்தீஷ்கர், ஹரியானா, பீகார் ஆகிய மாநிலங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு சுய பதிவேற்ற முறையில் தற்போது நடைபெற்று வருகிறது.

கர்நாடகா, கோவா, மிசோரம், ஒடிசா, சிக்கிம், அந்தமான், லட்சத்தீவு, தில்லி உள்ளிட்ட பகுதிகளில் வீடுகளுக்கு சென்று கணக்கெடுப்பது தொடங்கியுள்ளது.

இந்த கணக்கெடுப்பில் அப்பகுதியில் உள்ள வீடுகள் தொடர்பான விவரங்கள், வீட்டு வசதி நிலவரம் உள்ளிட்ட தகவல்கள் சேகரிக்கப்படுகிறது.

>>>>> <<<<<

இந்தியா- ஜெர்மனி இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் பெர்லினில் அந்நாட்டில் வாழும் இந்தியர்களிடையே உரையாற்றிய அவர், இரு நாட்டு அரசுகளிடையேயான உறவுகள் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

கலாச்சாரம், கலை உள்ளிட்ட துறைகளில் இந்தியா- ஜெர்மனி இடையே நீண்டகால உறவுகள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்கு நாடாக ஜெர்மனி திகழ்வதாக அவர் கூறினார்.

ஜெர்மன் நாட்டின் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்தியாவில் செயல்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஜெர்மனியில் வசிக்கும் 3 லட்சத்து 70 ஆயிரம் இந்தியர்களின் பங்களிப்பையும் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டினார்.

>>>>> <<<<<

முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சவுகான், பிரிட்டன் Air Chief Marshal Richard Knighton உடன் லண்டனில் ஆலோசனை மேற்கொண்டார்.

அரசு முறைப் பயணமாக பிரிட்டன் சென்றுள்ள அவர், இரு நாடுளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்.

உலகளாவிய பாதுகாப்பு சூழல் குறித்தும் இருவரும் விவாதித்தனர்.

>>>>> <<<<<

இந்தியா- தென் ஆப்பிரிக்கா இடையேயான மூன்றாவது மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஜோகன்னஸ்பர்க்கில் இப்போட்டி இரவு மணி 9.30-க்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இந்த தொடரில் தென் ஆப்பிரிக்கா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

-------------------

*Senec சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Akash Pal- Sutirtha Mukherje இணை பட்டம் வென்றது.*

-------------------

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prajawal Dev கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-2, 6-1 என்ற செட் கணக்கில் சீனாவின் Shaoyun Liu-வை வென்றார்.*

-------------

*பானிபட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சவுத்ரி கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 6-2 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Suryanshi Shekhawat-ஐ வென்றார்.*

*இப்போட்டியில் ஹர்ஷினி நாகராஜ், Akanksha Dileep ஆகியோரும் கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

***>>>>>END<<<<<***